சிறுவர் பகுதி



# ஆட்டைக் காப்பாத்தினவன் நாட்டை காப்பாத்தினான்

## அவன் யார்?

ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

மே மே மே-னு ஒரு பக்கம் சத்தமும், டிங்,டிங்,டிங்னு என்று இன்னொரு பக்கம் சத்தம் கேட்குது. தூரத்தில ஒரு சின்னப்பையன் கையில கம்போடு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அண்ணன்கள் எல்லாரும் மிலிட்டரி வேலைக்கு போயிட்டாங்க. ஆனால் அவங்க அப்பாவுக்கு அவனைக் குறிச்சு அவ்வளவு நல்ல அபிப்பிராயமெல்லாம் (எண்ணமெல்லாம்) இல்லை. அது கிடக்குது அதுக்கு படிப்பெல்லாம் வராது. மாடு மேய்க்கத்தான் லாய்க்கு சொல்லுவாங்கள் இல்ல அது மாதிரி அவனை ஆடு மேய்க்க விட்டுட்டாங்க!. ஆனா பாருங்க! அந்தச் சின்னப் பையன் இருக்கான்ல அவன் அந்த ஆடுகளை யெல்லாம், ஒரு பாசமுள்ள அம்மா, அப்பா தன் பிள்ளைகளைப் பாத்துக்கிற மாதிரி பார்த்துக்கிட்டான். எங்கே புல்லு கிடைக்கும், எங்கே தண்ணீர் காட்டலாம்னு யோசிச்சு அங்கே பத்திரமாய் கூட்டிப் போவான். எந்த ஆட்டை எப்படி பாத்துக்கணும்னு நல்லா தெரிஞ்சு வைச்சிருந்தான்.

ஒரு தடவை அவங்க ஆடுகளை மேய்ச்சிட்டு இருக்கிற இடத்திற்கு சிங்கம் வந்திருச்சு, இன்னொரு தடவை கரடி வந்துருச்சு ஒரு ஆட்டை பிடிச்சிருச்சு. அப்போ அவன் தன் உயிரைக்கூட பெரிசா நினைக்காமல் அந்தக் சிங்கத்தையும், கரடியையும் விரட்டிப் பிடித்து அதைக் அடிச்சு கொன்று போட்டுட்டு, ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றினான். ஒரு தடவை மிலிட்டரில இருக்கிற அண்ணாங்களுக்கு அப்பா சாப்பாடு கொடுத்துட்டு வரும்படி அவன் கிட்ட சொன்னாரு. ஐ.... ஜாலி ஜாலி இன்னைக்கு ஆடு மேய்க்க வேணாம். ராணுவ வீரர்களைப் பார்க்கலாம். ராஜாவ பார்க்கலாம்னு ஹாயா ஓடி வராம அந்த ஆடுகளையெல்லாம், வாட்ச்மேன் கிட்ட பத்திரம பாத்துக்க சொல்லிட்டு போனான். ஆடுகள் மேல அவ்வளவு அக்கறையும், செய்யச் சொல்ற வேலையில ரொம்ப கவன மாகவும் இருந்தான்.

வீட்டில ஒரு விருந்தினா அவனை கூப்பிட மாட்டாங்க, அண்ணாங்களும் சேர்த்து கிட்டு அதட்டுவாங்க 'நீ போய் உன் வேலையை பாருடானு தலையில தட்டினாலும், அதட்டினாலும் அதையெல்லாம் பெரிசா எடுத்துக்க மாட்டான், அவன் சின்னப் பையனாயிருந்தாலும் இயேசப்பா மேல ரொம்ப அன்பாயிருந்தான். பெரியவங்க செய்ற வேலையை யெல்லாம இயேசப்பாவின் ஞானத்தினாலும், பெலத்தினாலும் சின்ன வயசில செய்ய ஆரம்பிச்சுட்டான். அப்படி என்ன செஞ்சான் தெரியுமா? ஒரு பெரிய ராட்சதன் இஸ்ரவேல் நாட்டு மக்களை சண்டைக்கு இழுத்து பயமுறுத்திக்கிட்டு இருந்தான். ராஜாவே பயந்துகிட்டு இருந்தப்ப, இந்தச் சின்னப்பையனுக்கு ஆட்டுக்குட்டிகளை காப்பாத்தின மாதிரி, நம்ம நாட்டையும், மக்களையும் காப்பாத்தினுடம்னு ஆசை வந்துருச்சு, ஆட்டை மேய்க்கும் போது வச்சிருக்கும் கவண் கல்லை எடுத்து அந்த ராட்சனின் நெற்றியில படும்படி எறிஞ்சான் பாருங்க அவன் பொட்டுனு விழுந்தான். விழுந்தவுடனே அவனுடைய பட்டயத்தையே எடுத்து அவன் தலையை வெட்டினான். ஆடுகளை காப்பாற்றினவன் நாட்டையே காப்பாற்றினான். வளர்ந்த பின் சில ஆண்டுகளில் இஸ்ரவேல் நாட்டின் அரசனான். இஸ்ரவேல் நாட்டை ஆட்சி செய்த எத்தனையோ அரசன்களில் மிகச்சிறந்த அரசனாக ஆனதோடு, இவருடைய குடும்ப வாரிசுகளில் தான் இயேசு கிறிஸ்துவும் பிறந்தார்.

இவ்வளவு மேன்மைகளும் எளிதாக அவனுக்குக் கிடைக்கவில்லை. சிறுபையனாக இருந்ததிலிருந்து அவனுக்கு கொடுக்கப்பட்ட வேலையில் சுயநலமில்லாமல், பொறுப்போடும், பொறுமையோடும் ஆடுகளாயிருந்தாலும், மக்களாயிருந்தாலும் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் யாருனு உங்களுக்கு தெரிஞ்சுக்க ஆசையா? தெரிஞ்சிருச்சா சொல்லுங்க பாப்போம்! தாவீது தாவீது தாவீது......ஒகே ஒகே குட்டிஸ் நீங்களும் தாவீது மாதிரி கண்ணும் கருத்தாய் நல்லா படிங்க, வேலை செய்யுங்க. எதிர்காலத்தில் மிக உயர்ந்த மனிதரா வருவீங்க.

### ஜெபம்:

அன்புள்ள இயேசப்பா எனக்கு கொடுக்கப்படும் வேலையை (படிப்பை) கவனமா செய்ய ஞானம் தாங்க யார் வெறுத்தாலும், மக்களுக்காக, நாட்டுக்காக நல்லது செய்து உங்க நாமத்தை மகிமைப்படுத்த உதவி செய்யுங்க. ஆமென்.

### மனப்பாடவசனம்

நானே நல்ல மேய்ப்பன் நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.
யோவா 10:11